**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006**

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

ந.க.எண் 539 /C6/SS/ 2020, நாள்: 12 .11.2020

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2020–21 ஆம் கல்வி ஆண்டு – பள்ளிகளில் மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு (Secondary & Elementary) – பள்ளி வளாகத்தை தூய்மைப்படுத்துதல் – நிதி விடுவித்தல் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குதல் – சார்பு.

பார்வை : மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை, திட்ட ஏற்பளிப்புக் குழு கடிதம் எண். F.No.28-2/2020-IS-9, நாள் 15.07.2020, (வ. எண்– 71.a & 72.b)

*******

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வாயிலாக, 2020 –21 ஆம் கல்வியாண்டில் அனைத்து அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் எவ்வித பயமும் இன்றி பாதுகாப்பு உணர்வுடன் கல்வி கற்கும் சூழலை உருவாக்குவதற்காக, "பள்ளிகளில் மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு" (Safety & Security at School level) என்ற தலைப்பில் பள்ளி ஒன்றுக்கு ரூ.500/– வீதம் திட்ட ஏற்பளிப்புக் குழுவால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் உயரிய நோக்கம், உலக அளவில் கோவிட் – 19 கிருமியின் காரணமாக நோய்த் தொற்று பரவும் அசாதாரணமான தற்போதைய சூழலில், பள்ளி மாணவர்கள் எவ்வித பயமும் இன்றி பள்ளிக்கு வருவதை உறுதிபடுத்துவதும், தன்சுத்தத்துடனும், பாதுகாப்பு உணர்வுடனும் கல்வி கற்கும் சூழலை பள்ளிகளில் ஏற்படுத்துவதும் ஆகும். எனவே பள்ளி வளாகம் மற்றும் வகுப்பறைகளை கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்தும் பணிக்காக, பள்ளி ஒன்றுக்கு ரூ.500/– வீதம் 6,173 அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளுக்கும், 31,297 அரசு தொடக்க/நடுநிலைப் பள்ளிகளுக்கும் இணைப்பில் உள்ளவாறு, மாவட்டங்களுக்கு நிதி விடுவிக்கப்பட்டு அதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகிறது.

**வழிகாட்டுதல்கள்:**

**மாவட்டங்கள் மேற்கொள்ள வேண்டியவை :**

1. மாநில திட்ட இயக்ககத்திலிருந்து நிதி விடுவிக்கப்பட்டவுடன் சார்ந்த பள்ளிகள் திறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு நிதியை விடுவித்து பள்ளிகளில் மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் குறித்த தெளிவான மற்றும் மாநில திட்ட இயக்ககத்தால் வழங்கப்பட்ட

3. இதற்காக ஒரு பொறுப்பு ஆசிரியரை நியமித்து தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்பார்வையிடச் செய்ய வேண்டும்.
4. தெளிவான செயல்முறை திட்டம் ( action plan with calendar of activity ) தயார் செய்து பயன்படுத்த வேண்டும்.

**மேற்பார்வையிடுதல்:**

1. பள்ளி திறப்பதற்கு முதல் நாளன்று மேற்காண் தூய்மைப்படுத்தும் பணிகள் அனைத்துப் பள்ளிகளிலும் நடைபெற்றதை அலுவலர்கள் மாவட்டங்களில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பார்வையிட வேண்டும்.

| வ.எண் | அலுவலர்கள் | மாவட்டத்தில் உள்ள மொத்தப் பள்ளிகளில் |
|---|---|---|
| 1 | CEO | 5% பள்ளிகள் |
| 2 | DEO | 10 % பள்ளிகள் |
| 3 | BEO | 25 % பள்ளிகள் |
| 4 | ADPC/APO | 25 % பள்ளிகள் |
| 5 | BRTE | ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்துப் பள்ளிகள் |

2. இது சார்ந்து அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பள்ளிகளின் பெயர்ப்பட்டியல் அடங்கிய முதன்மைக் கல்வி அலுவலரின் தனி செயல்முறைகள்(Proceedings) பள்ளிகளுக்கு அனுப்பப்பட வேண்டும்.
3. அனைத்துப் பள்ளிகளும் ஆய்வு செய்யப்பட்டதை CEO உறுதிப் படுத்துதல் வேண்டும். அதற்கான அறிக்கையினை EMIS Portal – இல் பதிவு செய்ய வேண்டும். உரிய படிவம் (Report format) பின்னர் தனியே அனுப்பப்படும்.

**பள்ளிகள் திறந்த பின்:**

1. பள்ளிகள் திறந்த பிறகு, கோவிட் – 19 கிருமியின் காரணமாக நோய்த் தொற்று பரவும் அசாதாரணமான சூழலில், நோய்த் தொற்று பரவாமல் இருக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

3. இதற்காக ஒரு பொறுப்பு ஆசிரியரை நியமித்து தூய்மைப்படுத்தும் பணிகளை மேற்பார்வையிடச் செய்ய வேண்டும்.
4. தெளிவான செயல்முறை திட்டம் ( action plan with calendar of activity ) தயார் செய்து பயன்படுத்த வேண்டும்.

**மேற்பார்வையிடுதல்:**

1. பள்ளி திறப்பதற்கு முதல் நாளன்று மேற்காண் தூய்மைப்படுத்தும் பணிகள் அனைத்துப் பள்ளிகளிலும் நடைபெற்றதை அலுவலர்கள் மாவட்டங்களில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு பார்வையிட வேண்டும்.

| வ.எண் | அலுவலர்கள் | மாவட்டத்தில் உள்ள மொத்தப் பள்ளிகளில் |
|---|---|---|
| 1 | CEO | 5% பள்ளிகள் |
| 2 | DEO | 10 % பள்ளிகள் |
| 3 | BEO | 25 % பள்ளிகள் |
| 4 | ADPC/APO | 25 % பள்ளிகள் |
| 5 | BRTE | ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்துப் பள்ளிகள் |

2. இது சார்ந்து அலுவலர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பள்ளிகளின் பெயர்ப்பட்டியல் அடங்கிய முதன்மைக் கல்வி அலுவலரின் தனி செயல்முறைகள்(Proceedings) பள்ளிகளுக்கு அனுப்பப்பட வேண்டும்.
3. அனைத்துப் பள்ளிகளும் ஆய்வு செய்யப்பட்டதை CEO உறுதிப் படுத்துதல் வேண்டும். அதற்கான அறிக்கையினை EMIS Portal – இல் பதிவு செய்ய வேண்டும். உரிய படிவம் (Report format) பின்னர் தனியே அனுப்பப்படும்.

**பள்ளிகள் திறந்த பின்:**

1. பள்ளிகள் திறந்த பிறகு, கோவிட் – 19 கிருமியின் காரணமாக நோய்த் தொற்று பரவும் அசாதாரணமான சூழலில், நோய்த் தொற்று பரவாமல் இருக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

2. மேலும் அனைத்து அரசுப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் "பள்ளிகளில் மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு" சார்ந்து குறிப்பாக கோவிட் – 19 நோய்த் தொற்று பற்றிய விழிப்புணர்வு சார்ந்து ஒருநாள் பயிற்சியும் அதற்கான பயிற்சி கட்டகமும் வழங்கப்பட உள்ளது. அது குறித்த விரிவான விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும்.
3. பயிற்சி முடிந்தவுடன் மேற்காண் பொருள் சார்ந்த விழிப்புணர்வை மாணவர்கள், அவர்களின் பெற்றோர் ஆகியோரிடம் கொண்டு சேர்த்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
4. கோவிட் – 19 குறித்து அரசின் சுகாதாரத்துறை வாயிலாக வழங்கப்படும் வழிக்காட்டு நெறிமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

மேற்காணும் வழிகாட்டுதல்கள் மற்றும் அனைத்து நடைமுறைகளையும் முறையாக பின்பற்றவும் விடுவிக்கப்பட்ட நிதிக்கான செலவினத்தை அந்தந்த மாவட்டங்களின் Quality Components – Fund for Safety & Security at School level (Secondary – PAB S.No. 71.a and remaining from 71.b, Elementary- PAB S.No. 72.b and remaining from 72.d) என்ற தலைப்பில் மேற்கொள்ளவும் அனைத்து மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: மாவட்ட வாரியாக நிதி விடுவிப்பு விவரம் (Secondary & Elementary)

மாநில திட்ட இயக்குநருக்காக

பெறுநர்

அனைத்து மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் / முதன்மைக் கல்வி அலுவலர்கள்.